




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 321 | 4 Pages | 16.6.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 321 | 4 பக்கங்கள் | 16.6.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ**
**மன்னுயிர்க் கின்னா செயல்**

**விளக்கம்:**
**தன் உயிருக்குத் துன்பமானவை இவை என்று உணர்ந்தவன், அத் துன்பத்தை மற்ற உயிருக்குச் செய்தல் என்ன காரணத்தாலோ.**

## ராஜஸ்தான், மத்தியபிரதேசத்தில் என்.ஐ.ஏ. சோதனை



ஜெய்ப்பூர், ஜூன் 16

ராஜஸ்தா மற்றும் மத்தியபிரதேசத்தில் தேசிய புலனாய்வுஅமைப்பு(என்.ஐ.ஏ) இன்று அதிரடி சோதனை நடத்தியது.மத்தியபிரதேசத்தின் போபாலில் 3 இடங்கள் , ராஜஸ்தானின் ஜலாவாரில் 2 இடங்கள் என மொத்தம் 5 இடங்களில் இந்த சோதனை நடைபெற்றது.

தடைசெய்யப்பட்ட ஹிப்ஸ் உட் தஹிர் என்ற தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புடன் தொடர்பில் இருப்பவர்களாக சந்தேகிக்கப்படும் நபர்களுக்கு சொந்தமான இடங்கள் இந்த சோதனை நடைபெற்றது. இந்த சோதனையில் டிஜிட்டல் சாதனங்கள், ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த சோதனையில் கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

## மும்பை: ரசாயன நிறுவனத்தில் தீ விபத்து




மும்பை, ஜூன் 16

சத்ரபதி சம்பாஜிநகர் மாவட்டத்தில் உள்ள பைதான் எம்.ஐ.டி.சி.யில் உள்ள ஒரு ரசாயன நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தில் பலரும் வேலை செய்து வருகின்றனர். இந்த நிலையில் இன்று நிறுவனத்தில் தீ ஏற்பட்டது. இதனையடுத்து தீயானது மளமளவென பரவத்தொடங்கியது.

மாலை 5:50 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டதாக தீயணைப்புத்துறையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பல தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்ட பின்னர் இரவு 7:05 மணிக்குள் தீ அணைக்கப்பட்டது

இந்த சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக யாருக்கும் காயம் ஏற்படவில்லை . தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்பட்டு வருவதாக தீயணைப்புத்துறையினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கேரள கடற்கரை அருகே தீப்பிடித்த கப்பல்; கண்டெய்னர்கள் கரை ஒதுங்க வாய்ப்பு பொதுமக்களுக்கு எச்சரிக்கை



திருவனந்தபுரம், ஜூன் 16

இலங்கை தலைநகர் கொழும்புவில் இருந்து மும்பை நோக்கி கடந்த 9ந்தேதி 'எம்.வி. வான ஹை 503' என்ற சிங்கப்பூர்சரக்கு கப்பல் சென்று கொண்டிருந்தது. அந்த சரக்கு கப்பல் கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் அழிக்கல் கடற்கரை அருகே நடுக்கடலில் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று கப்பலின் ஒரு பகுதி தீப்பிடித்து எரிந்தது.

அந்த தீ மளமளவென பரவி கன்டெய்னர்களுக்கும் தீப்பற்றி எரிந்ததால், அந்த கண்டெய்னர்கள் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறின. இதனால் சரக்கு கப்பலில் இருந்த கேப்டன் உள்பட 22 பேர் உயிர் தப்பிக்க கடலில் குதித்தனர். அவர்கள் நடுக்கடலில் தத்தளித்து கொண்டிருந்தனர். இதுபற்றி அறிந்ததும் அழிக்கல் துறைமுகத்தில் இருந்து கடலோர பாதுகாப்பு படையினர்சம்பவபகுதிக்குவிரைந்துசென்றுமீட்புபணியில்ஈடுபட்டனர்.

இந்த நிலையில், தீப்பிடித்த கப்பலில் இருந்து கடலில் விழுந்த கண்டெய்னர்கள் கேரள கடற்கரையில் கரை ஒதுங்க வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த கண்டெய்னர்கள் எர்ணாகுளம் மாவட்டத்தின் தெற்கு பகுதியிலும், ஆலப்புழா மற்றும் கொல்லம் மாவட்டத்தின் கடற்கரையிலும் கரை ஒதுங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக கடலோர காவல்படையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடலோர பகுதியில் ஏதேனும் பொருட்கள் தென்பட்டால் பொதுமக்கள் உடனடியாக 112 என்ற எண்ணை அழைத்து பொருளின் இருப்பிடத்தை தெரிவிக்க வேண்டும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இந்த கண்டெய்னர்கள் வரும் 16ந்தேதி முதல் கரைக்கு வர வாய்ப்புள்ளதாகவும், அவ்வாறு சந்தேகத்திற்குரிய பொருட்கள் கடற்கரைக்கு வந்து சேர்ந்தால் அவற்றை தொடக்கூடாது என்றும், அந்த பொருட்களிடம் இருந்து 200 மீட்டர் தள்ளி இருக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கேரள கடற்கரை பகுதிகளில் தற்போது போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## விமான விபத்தில் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறிய காங்கிரஸ் தலைவர் கார்கே

காந்தி நகர், ஜூன் 16

குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் இருந்து நேற்று முன் தினம் மதியம் 1.39 மணியளவில் ஏர் இந்தியா விமானம் இங்கிலாந்தின் லண்டனுக்கு புறப்பட்டது. அந்த விமானத்தில் 230 பயணிகள் 10 பணியாளர்கள், 2 விமானிகள் என மொத்தம் 242 பேர் பயணித்தனர்.

புறப்பட்ட சில நிமிடங்களில் விமான நிலையத்தில் இருந்து 2 கிலோமீட்டர் தொலைவில் உள்ள மருத்துவ கல்லூரி மாணவர் விடுதி மீது விமானம் விழுந்து வெடித்து சிதறியது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 241 பேர் உயிரிழந்தனர். மருத்துவ கல்லூரி மாணவர் விடுதியில் மாணவர்கள் உள்பட 29 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் மொத்தம் 270 பேர் உயிரிழந்ததாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஆமதாபாத்தில் ஏர்இந்தியாவிமானவிபத்துநடைபெற்ற பகுதியை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே இன்று நேரில் பார்வையிட்டார். இதனை தொடர்ந்து விமான விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களையும் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். கார்கே உடன் கர்நாடக துணை முதல்மந்திரி டிகே சிவக்குமார் உள்பட காங்கிரஸ் தலைவர்களும் சென்றனர்.

# காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கண்டிக்கத்தக்கது; முதல்வர் மு.க.ஸ்டாலின்

சென்னை, ஜூன் 16

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், ராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 53 பேர் பணய கைதிகளாக உள்ளனர். இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை, காசா முனையில் இஸ்ரேல் ஓராண்டுக்குமேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த போரில் காசா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் உள்பட 55 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இதனிடையே, ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் மத்திய கிழக்கில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது.





இந்நிலையில், காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்று தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், ஈரான் மீதான இஸ்ரேலின் பொறுப்பற்ற அத்துமீறிய செயல் போரை விரிவடையச்செய்யும் செயல். அதனுடன் காசாவில் இஸ்ரேல் தொடர்ந்து குண்டு வீச்சு தாக்குதல் நடத்தி பாலஸ்தீனிய மக்கள் பாதிக்கப்படுகின்றனர். இஸ்ரேலின் இந்த வன்முறைப்பாதை நிச்சயம் கண்டிக்கத்தக்கது. இதற்கு கட்டுப்பாடு, நீதி மற்றும் அர்த்தமுள்ள ராஜதந்திரம் மூலம் முடிவுக்கு கொண்டு வர உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். இனி போர் வேண்டாம்' என தெரிவித்துள்ளார்..

## பிரதமர் ஸ்ரீநகரில் 6400 கோடி ரூபாய்க்கான திட்டங்களின் கீழ் எந்த பணியும் சரிவர முடியாமலும், முடிந்தபணிகள் பயன்பெறாமலும் இருப்பதால் பொதுமக்கள் அவதி?

கடந்த 2024 மார்ச் மாதம் பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஸ்ரீநகரில்6400கோடிரூபாய்க்கான திட்டங்களை அறிவித்தார்!

அதில் சுதேஷ் தர்ஷன் 2.0 திட்டத்தின் கீழ் காரைக்கால் கடற்கரையில் உணவு மண்டலம், செயற்கை மேற்பரப்பு பகுதி, பாதைகள், நிலப்பரப்பு, வாகனம் நிறுத்தும் இடம், குழந்தைகள் விளையாட்டு பகுதி உள்ளிட்டவற்றை மேம்படுத்த 20.3 கோடி ரூபாய் வழங்கினார்! இதை ஆளுநர், முதல்வர், சபாநாயகர், அமைச்சர்கள் வரவேற்றனர், இரண்டு ஆண்டுகளில் இப்பணியை முடிக்க அறிவுறுத்தப்பட்டது ! ஓர் ஆண்டு முடிந்த நிலையில் இது வரை இத்திட்டத்தின் மூலம் முடிந்த பணிகள் என்ன என்ன என்பதை மக்களுக்கு தெளிவு படுத்த வேண்டுகிறோம் ! 23ஏக்கரில் கடற்கரையை ஒட்டி உள்ள




அலையாத்தி காடுகளில் ஓசோன்பூங்கா மற்றும்பொழுதுபோக்கு சாதனங்களை உருவாக்குவது என்றார்கள் அது பேச்சாகவேபோனது! நடைப்பாதையில் உள்ள இருக்கைகள் அனைத்தும் இடிந்தும், சிதிலமடைந்துகிடக்கிறது! பொதுப் பணி துறை நடைப்பாதையை ஆக்கிரமித்து குடோனாக பயன்படுத்துகிறது, கட்டண கழிப்பிடம் பூட்டி கிடக்கிறது! கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பாலப்பகுதி இரவு நேரத்தில் வாகனத்தில் வரும் சுற்றுலா பயணிகளுக்கு ஆபத்தை விளைவிக்கும் வகையில் பாதுக்காப்பற்ற நிலையில் உள்ளது , ! மாவட்ட ஆட்சியர் சுதேஷ் தர்ஷன் 2.0திட்டத்தை விரைந்து முடிக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுகிறோம்.

## பா.ம.க பல்லடம், தாராபுரம் தொகுதிகளுக்கு திருப்பூர் கிழக்கு புதிய மாவட்ட செயலாளர் நியமனம் -அ. ரவிச்சந்திரன் பொறுப்பேற்பு

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம் மற்றும் தாராபுரம் சட்டமன்ற தொகுதிகளுக்கான பாட்டாளி மக்கள் கட்சியின் (பா.ம.க) புதிய மாவட்டச்செயலாளராக அ. ரவிச்சந்திரன் நியமிக்கப்பட்டு ள்ளார். இந்த நியமனத்தை கட்சியின் தலைவர் மருத்துவர் அன்புமணிராமதாஸ்அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார்.

புதிய பொறுப்பேற்பு விழா:

புதிதாக நியமிக்கப்பட்ட அ. ரவிச்சந்திரன் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் கட்சி அலுவலகத்தில் பா.ம.க நிர்வாகிகளின் முன்னிலையில், கூட்டம் ஒன்றில் தனது மாவட்டச் செயலாளர் பதவியை அதிகாரப்பூர்வமாக ஏற்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில்: மாவட்ட நிர்வாகிகள், கிளைத் தலைவர்கள், இளைஞரணி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அப்போது புதியதாக மாவட்டச் செயலாளர் பொறுப்பேற்றிருக்கும் ரவிச்சந்திரன் அவர்களுக்கு முக்கிய நிர்வாகிகள் சால்வை அணிவித்தும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.



பொதுமக்களிடையே பா.ம.க.வின்வளர்ச்சி, சேவை முயற்சிகள், புதிய உறுப்பினர் சேர்க்கை உள்ளிட்ட திட்டங்கள் குறித்து பேசப்பட்டன.

புதிய பொறுப்பேற்பாளராக ரவிச்சந்திரன் தனது உரையில், "பா.ம.க.வின் கொள்கைகளையும், அன்புமணி அவர்களின் இலட்சியங்களையும் மக்கள்மத்தியில் கொண்டு செல்ல பணியாற்றுவேன். பல்லடம், தாராபுரம் தொகுதிகளில் பா.ம.க.வை வலுப்படுத்த நேரடியாக செயல்படுவேன்" என உறுதியளித்தார்.

## குமரியில் கடல் சீற்றம்; கடற்கரையில் தடுப்புகள் அமைத்து போலீசார் தீவிர கண்காணிப்பு

கன்னியாகுமரி, ஜூன் 16

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது. இதனால் திற்பரப்பு அருவி உள்ளிட்ட சுற்றுலா தளங்களில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதையொட்டி பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தினந்தோறும் நூற்றுக்கணக்கான சுற்றுலா பயணிகள் குவியும் கன்னியாகுமரி கடற்கரையில், காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் கடல் அலையின் சீற்றம் அதிகரித்து காணப்படுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் கடலில் இறங்கி குளிக்க வேண்டாம் எனவும், கால்களை நனைக்க வேண்டாம் எனவும் போலீசார் அறிவுறுத்தியுள்ளனர். மேலும் கடற்கரையில் தடுப்புகள் அமைத்து போலீசார் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.



## திருமலைராஜன் ஆற்றில் தூர்வாரும் பணிகள் விவசாயிகள் மகிழ்ச்சி

திருவாரூர், ஜூன் 16

குடவாசல் பகுதியில் பெரும்பான்மையான மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக செய்து வருகின்றனர். இந்தப் பகுதியில் விளை நிலங்களுக்கு ஆதாரமாக விளங்குவது திருமலை ராஜன் ஆறு ஆகும். இந்த ஆற்றின் மூலம் கும்பகோணம், திருவிடைமருதூர், குடவாசல், நன்னிலம் மற்றும் காரைக்கால் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இதில் கண்டரமாணிக்கம், சீதக்கமங்கலம், அதம்பார், நெம்மேலி பகுதியில் இந்த ஆற்றில் புதர்கள் மண்டி, ஆற்றில் தண்ணீர் செல்ல முடியாத நிலையில் இருந்தது. இது தொடர்பான செய்தி கடந்த சில நாட்களுக்கு முன்பு 'தினத்தந்தி' நாளிதழில் புகைப்படத்துடன் வெளியானது. இந்த செய்தியின் எதிரொலியாக மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தலின் பேரில் பொதுப்பணித்துறை சார்பில் நேற்று திருமலை ராஜன் ஆற்றில் செம்பியன் கூந்தலூர், சீதக்கமங்கலம், பம்மல் ஆகிய இடங்களில் போர்க்கால அடிப்படையில் எந்திரங்கள் மூலம் தூர்வாரும் பணியை தொடங்கி உள்ளனர். இதனால் மகிழ்ச்சி அடைந்துள்ள அப்பகுதி விவசாயிகள் உடன் நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும், செய்தி வெளியிட்ட 'தினத்தந்தி' நாளிதழுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.




# சென்னை விமான நிலையத்தில் 6 விமானங்கள் ரத்து

சென்னை, ஜூன் 16

சென்னைமீனம்பாக்கம் விமான நிலையத்தில் இன்று மாலை 3 மணிக்கு சென்னை சிவமொகா விமானம், இரவு 8.35 மணிக்கு சென்னை கொச்சி விமானம், இரவு 9 மணிக்கு சென்னை கோழிக்கோடு விமானம் ஆகிய 3 புறப்பாடு விமானங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதைப்போல் கோழிக்கோட்டில் இருந்து சென்னை வரும் தனியார் பயணிகள் விமானம்,அந்தமானில்இருந்து சென்னை வரும் விமானம், சிவமொகாவில் இருந்து சென்னை வரும் விமானம் ஆகிய 3 விமானங்களின் வருகையும் ரத்துசெய்யப்பட்டுள்ளது.

இதுகுறித்து விமான நிறுவனங்கள் தரப்பில் கூறுகையில், நிர்வாக காரணங்கள் காரணமாகவும், போதிய பயணிகள் இல்லாததாலும் விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும், முன்பதிவு செய்திருந்த பயணிகளுக்கு ஏற்கனவே தகவல்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'கூட்டணியில் இருந்தும் வி.சி.க. பேரணிக்கு அனுமதி மறுக்கப்பட்டது' திருமாவளவன்



திருச்சி, ஜூன் 16

வக்பு திருத்த சட்டத்திற்கு எதிராக திருச்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சிசார்பில்பிரம்மாண்ட எழுச்சிப் பேரணி நடைபெற்றது. திருச்சி டி.வி.எஸ். டோல்கேட் பகுதியில் தொடங்கி, சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு பேரணி நடைபெற்றது. இதனை முன்னிட்டு, வழிநெடுகிலும் கட்சிக்கொடிகளும், பிரம்மாண்ட பேனர்களும் அமைக்கப்பட்டிருந்தன.

பேரணியின்போது வி.சி.க. தலைவர் திருமாவளவன் திறந்த வாகனத்தின் மீது பயணித்தார். அப்போது அவர் தொண்டர்களுடன் செல்பி எடுத்துக் கொண்டார். இதன் பின்னர் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திருமாவளவன் பேசியதாவது;

"திருச்சியில் பேரணி நடத்துவதற்கு முதலில் அனுமதி இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நாம் ஆளுங்கட்சி கூட்டணியில் இருந்தும் நமக்கு பேரணி நடத்த அனுமதி மறுக்கப்பட்டது. அவ்வளவு நெருக்கடிகளையும் தாங்கிக் கொண்டு களத்தில்நிற்கும் இயக்கம்தான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி.

பா.ஜ.க.வின் செயல் திட்டத்தை நிறைவேற்ற பலபேர் பல வேஷம் போடுகின்றனர். சில பேர் சினிமா புகழோடு வந்திருக்கிறார்கள். நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அம்பேத்கரை ஏற்றுக்கொண்ட எவனும் எந்த விளம்பர மாயைக்கும் பணிய மாட்டான். அம்பேத்கர் அரசியல் வேறு. அதை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது."

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

# துப்பாக்கி கலாசாரத்தைக் கட்டுப்படுத்த முடியாத திமுக அரசு பதவி விலக வேண்டும் அன்புமணி ராமதாஸ்

சென்னை, ஜூன் 16

பாமக தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

ஒருங்கிணைந்தவேலூர் மாவட்ட பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணி செயலாளர் வழக்கறிஞர் சக்கரவர்த்தியின் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக பாட்டாளி மக்கள் கட்சியினர் குற்றம் சாட்டி வந்த நிலையில், அவர் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று அவரது உடற்கூறு ஆய்வில்தெரிய வந்திருப்பதாக கூறப்படுகிறது. ஓர் அரசியல் கட்சியின் மூத்த நிர்வாகியாகவும், வழக்கறிஞராகவும் இருக்கும் ஒருவருக்கே பாதுகாப்பற்ற நிலைதான் தமிழகத்தில் நிலவுகிறது என்பது வெட்கக்கேடானது.

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகரத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்கள் கட்சியின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட இளைஞரணி செயலாளரும், வழக்கறிஞருமான சு.சக்கரவர்த்தி, கடந்த 11ஆம் தேதி இரவு இருசக்கர ஊர்தியில் அவரது வீட்டிற்கு அருகே சென்று கொண்டிருந்த போது, தவறி விழுந்து உயிரிழந்ததாக செய்திகள் வெளிவந்தன. அவர் உயிரிழந்தது விபத்து என்று காவல்துறையினர் கூறிவந்த நிலையில், அவர் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டதாக உள்ளூர் பாட்டாளி மக்கள் கட்சியினர் குற்றம் சாட்டி வந்தனர்.

அவர்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, வழக்கறிஞர் சக்கரவர்த்தியின் உடல் கூராய்வு செய்யப்பட்ட நிலையில், அவரை சிலர் துப்பாக்கியால் தலையில் சுட்டதால் குண்டு பாய்ந்து உயிரிழந்துவிட்டதாக தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக, சிலரை காவல்துறை கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

வழக்கறிஞர் சக்கரவர்த்தி படுகொலையின் பின்னணியில் மிகப்பெரிய சதித்திட்டம் இருப்பதாக கூறப்படுகிறது. கடந்த புதன் கிழமை இரவு சக்கரவர்த்தியின் நடமாட்டத்தை சிலர் கண்காணித்து வந்ததாகவும், அவரது வீட்டிற்கு அருகில் இருந்த சிலருக்கு அவர்கள் தொடர்ந்து தகவல் அளித்து வந்ததாகவும், அதன் அடிப்படையில்தான் சக்கரவர்த்தி, அவரது வீட்டை நெருங்கும்போது துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார் என்றும் கூறப்படுகிறது. சக்கரவர்த்தி, அடிப்படையில் ஒரு வழக்கறிஞர், அவர் ஒரு வழக்கறிஞராக கடமையை செய்ததற்காக கொல்லப்பட்டிருக்கிறார் என்பது அதிர்ச்சியளிக்கிறது.

வழக்கறிஞர் சக்கரவர்த்தியின் படுகொலை தொடர்பாக இரு வினாக்களுக்கு தமிழக அரசும், காவல்துறையும் விடையளிக்க வேண்டும். சக்கரவர்த்தியின் படுகொலைக்கானசதித்திட்டத்தை ஒரே நாளில் தீட்டி நிறைவேற்றியிருக்க முடியாது. பல நாட்களாகவே இந்த திட்டம் வகுக்கப்பட்டு, புதன்கிழமை இரவு அங்கேற்றப்பட்டிருக்க வேண்டும். சக்கரவர்த்தி அப்பகுதியைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் என்பது மட்டுமின்றி, பிரபல வழக்கறிஞராகவும் இருந்த நிலையில், அவருக்கு எதிரான சதித்திட்டத்தை கண்டறிந்து முறியடிக்க காவல்துறை



தவறியது ஏன்? தமிழக காவல்துறையின் உளவுத்துறை முற்றிலுமாக செயலிழந்துவிட்டதா? அல்லது கொலையாளிகளுக்கு துணை போனதா?

அடுத்ததாக, வழக்கறிஞர் சக்கரவர்த்தி துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இதில் சம்பந்தப்பட்டவர்களில் ஒருவரான பிரபு என்பவரை காவல்துறையினர் பிடிக்க முயன்றபோது, அவர் காவல்துறை ஊர்தியை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். அதில் காவல்துறை வாகனம் லேசாக சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்குக் காரணமான துப்பாக்கி கொலையாளிகளுக்கு எங்கிருந்து கிடைத்தது?

தமிழ்நாட்டில் கள்ளத் துப்பாக்கிகள் தாராளமாக கிடைப்பதாகவும், ரூ.5000 விலைக்குக் கூட துப்பாக்கிகள் விற்பனை செய்யப்படுவதாகவும், பல ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி குற்றம் சாட்டிவருகிறது.ஆனால், துப்பாக்கி கலாசாரத்தை கட்டுப்படுத்த தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காததன் விளைவுதான் பாட்டாளி மக்கள் கட்சியின் மாவட்ட நிர்வாகியும், வழக்கறிஞருமான சக்கரவர்த்தி துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் அரக்கோணம் பகுதியில் அனுமதியின்றி 2 துப்பாக்கிகள் வைத்திருந்ததாக திமுக நகராட்சி கவுன்சிலர் பாபு உள்ளிட்ட இருவர் கைது செய்யப்பட்டனர். அதே பகுதியில்தான் இப்போது வழக்கறிஞர் சக்கரவர்த்தி சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். கள்ளத்துப்பாக்கிகள் கட்டுப்பாடின்றி புழக்கத்தில் இருப்பதையே இந்த நிகழ்வுகள் காட்டுகின்றன.

தமிழ்நாட்டில் துப்பாக்கி கலாசாரம் தலைவிரித்தாடுவதைப் பார்க்கும் போது நாம் பாதுகாப்பாகத் தான் வாழ்கிறோமா? என்ற வினா எழுகிறது. தமிழ்நாட்டில் கொலை கொள்ளை உள்ளிட்டகுற்றங்கள்நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த திமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பண்ணைத் தோட்டங்களில் நடைபெற்ற கொலைகள் தொடர்பாக போலி குற்றவாளிகளை கைது செய்து திமுக அரசு தப்பிக்கப் பார்க்கிறது, சட்டம் ஒழுங்கை பாதுகாக்க தவறிய, துப்பாக்கி கலாசாத்தை கட்டுப்படுத்த தவறிய திமுக அரசு தமிழ்நாட்டில் தொடர்ந்து ஆட்சி செய்யும் உரிமையை இழந்துவிட்டது. மக்களைப் பாதுகாக்கத் தவறிய திமுக அரசு, உடனடியாக பதவி விலக வேண்டும். சக்கரவர்த்தி படுகொலையில் சம்பந்தப்பட்ட அனைவரையும் கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைப் பெற்றுத் தரவேண்டும். அவரது குடும்பத்திற்கு தமிழக அரசு ரூ.1 கோடி இழப்பீடு வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திடீரென குறுக்கே வந்த நாய் தடுப்பு சுவரில் மோதி தலைகுப்புற கவிழ்ந்த கார்



ஈரோடு, ஜூன் 16

ஈரோடு ஆசிரியர் குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் துளசிமணி. இவருடைய மகள் வனஜா (வயது 27). ஈரோடு பெருந்துறையில் உள்ள தனியார் என்ஜினீயரிங் கல்லூரியில் உதவி பேராசிரியையாக வேலை கிடைத்து உள்ளது. இந்த நிலையில் வேலையில் சேர்வதற்காக வீட்டில் இருந்து சொகுசு காரில் நேற்றுகல்லூரிக்குசென்று கொண்டிருந்தார். காரை அவரே ஓட்டிச்சென்றார்.

பெருந்துறை ரோட்டில் பவளத்தாம்பாளையம் பகுதியில் சென்றபோது நாய்ஒன்றுகாரின்குறுக்கே ஓடியது. இதனால் அவர் நாய் மீது கார் மோதாமல் இருக்க முயன்றதாக தெரிகிறது. இதனால் சொகுசு கார் கட்டுப்பாட்டை இழந்து ரோட்டின் நடுவில் இருந்த தடுப்பு சுவரில் பயங்கர சத்தத்துடன் மோதி தலைகுப்புற கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்து நடந்த உடன் காருக்குள் இருந்த காற்றுப்பை (ஏர்பேக்) உடனே செயல்பட்டு திறந்ததால் வனஜா அதிர்ஷ்டவசமாக லேசான காயத்துடன் உயிர் தப்பினர்.

இதை கண்டதும் அக்கம் பக்கத்தினர் ஓடிச் சென்று வனஜாவை மீட்டு ஈரோட்டில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். இந்த விபத்தால் ஈரோடு பெருந்துறை ரோட்டில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. உதவி பேராசிரியை வேலையில் சேர சென்றபோது விபத்தில் இளம்பெண் சிக்கிய சம்பவம் ஈரோட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனிடையே இந்த விபத்து தொடர்பான கண்காணிப்பு கேமரா காட்சிகள் சமூக வலைத்தளத்தில் வைரல் ஆனது. இதுகுறித்து ஈரோடு தாலுகா போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# காவிரி ஆற்றில் செத்து மிதந்த மீன்கள் மக்கள் அதிர்ச்சி

மேட்டூர், ஜூன் 16

மேட்டூர் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு நேற்று முன்தினம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. பாசனத்திற்குதண்ணீர்திறப்பதற்கு முன்பு அணையில் இருந்து வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் காவிரி ஆற்றில் போதுமான தண்ணீர் திறந்து விடப்படாததால் ஆங்காங்கே பாறைகளாக காட்சியளித்தது. ஒரு சில பகுதியில் மட்டும் தண்ணீர் ஓடை போல் காணப்பட்டது.



தற்போது மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்கு வினாடிக்கு 6 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனால் காவிரி ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. மேட்டூர் காவிரி பாலம் முதல் செக்கானூர் வரை காவிரி ஆற்றில் பல் வேறு பகுதிகளில் ஏராளமான மீன்கள் செத்து மிதந்தது.

மேலும் ¾ கிலோ எடை வரை உள்ள மீன்கள் குவியல், குவியலாக கரை ஓரங்களில் மயங்கிய நிலையில் மிதந்தன. இதை அறிந்த அப்பகுதி காவிரி கரையோர பகுதியை சேர்ந்த பொதுமக்கள் விரைந்து சென்று தண்ணீரில் மிதந்த மீன்களை அள்ளி சென்றனர். இந்த மீன்கள் செத்தது மற்றும் மயங்கி கிடந்ததற்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 1600 கனஅடி நீர் திறப்பு

தேனி, ஜூன் 16

முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை எதிரொலியாக, முல்லைப் பெரியாறு அணையில் இருந்து 1600 கனஅடி நீர் திறந்து விடப்பட்டு உள்ளது. முல்லைப் பெரியாறு அணைப்பகுதியில் 41 மில்லி மீட்டரும், தேக்கடி பகுதியில் 16.4 மில்லி மீட்டரும் என மழை பதிவாகியுள்ளது.

இந்த நிலையில், முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து 1,190 கன அடியாக அதிகரித்தது. இதனால், அணையில் இருந்து 1600 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டு உள்ளது. இதனிடையே, ஆற்றில்



வெள்ளம் கரைபுரண்டு ஓடும் சூழலில், பொதுமக்கள் யாரும் குளிக்கவோ, கால்நடைகளை குளிக்க வைக்கவோ ஆற்றில் இறங்கக் கூடாது என மாவட்டநிர்வாகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

# நீட் தேர்வு தமிழகத்தில் 76,181 மாணவர்கள் தேர்ச்சி

புதுடெல்லி, ஜூன் 16

நாடு முழுவதும் மருத்துவப் படிப்புகளில் சேருவதற்காக நடத்தப்பட்ட தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வான 'நீட் யூஜி 2025' தேர்வை சுமார் 20 லட்சம் மாணவர்கள் எழுதினர். இந்தத் தேர்விற்கான தற்காலிக விடைக் குறிப்பை தேசிய தேர்வு முகமை கடந்த 3ம் தேதி வெளியிட்டது.

இந்நிலையில், நீட்யூஜி 2025 தேர்வு முடிவுகளை தேசிய தேர்வு முகமை தற்போது இணையதளத்தில் அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. நாடு முழுவதும் 22,09,318 மாணவர்கள் நீட் தேர்வு எழுதியதில்,





12,36,531 மாணவர்கள் தகுதி மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.


தமிழகத்தை பொறுத்தவரை, 1,35,715 மாணவர்கள்நீட் தேர்வு எழுதினர். இதில் 76,181 மாணவர்கள் தகுதி மதிப்பெண்களை பெற்றுள்ளனர். தமிழ்நாட்டில் 26,580 மாணவர்கள் தமிழ் வழி கேள்வித்தாள் மூலமாக நீட் தேர்வு எழுதினர்.

# இஸ்ரேல் ஈரான் போர் பதற்றம்... கவிஞர் வைரமுத்து வேதனை

சென்னை, ஜூன் 16

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே கடந்த ஓராண்டுக்கும் மேலாக போர் நடைபெற்று வருகிறது. இந்த போரில் இதுவரை ஏராளமானோர் கொல்லப்பட்டனர். குறிப்பாக ஹமாஸ் அமைப்பின் தலைவர்கள் பலர் கொல்லப்பட்டனர். இந்த போரால் உலக நாடுகள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர். இந்த நிலையில் ஈரான் மீது இஸ்ரேல் திடீரென தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடியாக இஸ்ரேல்தலைநகர்டெல் அவிவ் பகுதிகளில் ஈரான் தாக்குதல்நடத்தி உள்ளது.

இந்த நிலையில், கவிஞர் வைரமுத்து இஸ்ரேல் ஈரான் இடையே நடைபெற்று வரும் போர்ப்பதற்றம் குறித்து தனது எக்ஸ் தள பதிவில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் தெரிவித்திருப்பதாவது:



இதோ இன்னுமொரு யுத்தம் தாங்குமா?

மண்டை உடைந்துவிடும் மண்ணுருண்டை

இஸ்ரேல் காஸா சாவுச் சத்தம் அடங்குவதற்குள் ரஷ்யா உக்ரைன் ரத்தச் சகதி காய்வதற்குள் இஸ்ரேல் ஈரான் தொடங்கி விட்டது

சொல்பேச்சுக் கேட்காத இரு நாடுகளால் உலகத்தைச் சூழ்ந்திருக்கின்றன அச்சத்தின் கடலலைகள்

அப்பாவி மனித எலும்புகளை நொறுக்கித் தின்னுகின்றன ஆயுதப் பற்கள்

போர்ச் சங்கிலி என்பது உலகைப் பிணைத்திருக்கிறது

இஸ்ரேல்யுத்தம்மதுரை மல்லிகையில் புகையடிக்கிறது

ஈரான் யுத்தம் ஈரோட்டின் மஞ்சளைக் கரியாக்குகிறது மில்லி மீட்டர்களில் ஏறும் பொருளாதாரம் மீட்டர் மீட்டராய்ச் சரிகிறது

அணு ஆயுதங்களை மொத்தத்தில் அழிப்பதற்கு உலக நாடுகள் ஒரேமையில் கையொப்பமிட வேண்டும்

போர் வேண்டாம் புன்னகை வேண்டும்

யுத்தமில்லாத பூமி ஒரு சத்தமில்லாமல் வேண்டும்

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கொலை மிரட்டல் வழக்கில் கைது: பா.ஜ.க. மாநில ஓ.பி.சி. அணி மாநில செயலாளர் கட்சியில் இருந்து நீக்கம்

சென்னை ஜூன் 16

தமிழக பா.ஜ.க.வின் ஓ.பி.சி. அணி மாநில செயலாளராக வெங்கடேஷ் செயல்பட்டு வந்தார். பிரபல ரவுடியான வெங்கடேஷ் மீது செம்மரம்கடத்தல்,பணமோசடி, துப்பாக்கி வைத்து மிரட்டல் உள்பட பல்வேறு வழக்குகள் உள்ளன.

இதனிடையே, சென்னை செங்குன்றத்தில் எலக்ட்ரானிக் மற்றும் எலக்ட்ரிக்கல் பொருட்கள் விநியோக டீலருக்கு வெங்கடேஷ் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். மேலும், அவரை மிரட்டி பணம் பறிக்க முயன்றுள்ளார். இது தொடர்பாக ஆவடி போலீசில் புகார் அளிக்கப்பட்டது. புகாரின் அடிப்படையில் வழக்குப்பதிவு செய்த போலீசார், ரவுடி வெங்கடேசை நேற்று கைது செய்தனர்.



பாரதிய ஜனதா கட்சி - தமிழ்நாடு

BHARATIYA JANATA PARTY, TAMILNADU

தேதி: 14.06.2025

அறிவிக்கை

என்றும் தாயகப்பணியில்

(நயினார் நாகேந்திரன்)



இந்நிலையில், கொலை மிரட்டல் வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள பா.ஜ.க. மாநில ஓ.பி.சி. அணி மாநில செயலாளர் வெங்கடேஷ் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்ட அறிக்கையில்,

தமிழக பாரதிய ஜனதா கட்சியின் இதர பிற்படுத்தப்பட்டோர் அணியின் மாநில செயலாளராக பணியாற்றி வந்த வெங்கடேஷ் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியும், கட்சிக்கு களங்கம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டு வந்ததாலும், கட்சியின் பொறுப்பில் இருந்தும், அடிப்படை உறுப்பினரிலிருந்து நீக்கப்படுகிறார்.

ஆகவே கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அவரிடம் கட்சி சார்பாக எவ்வித தொடர்பும் வைத்துக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்படுகிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரோட்டில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 4 வங்காளதேச நாட்டினர் கைது

ஈரோடு, ஜூன் 16

ஈரோடு மாவட்டம் சென்னிமலை பகுதியிலும், அதை சுற்றியுள்ள தனியார் தொழிற்சாலைகளிலும் வங்காளதேச நாட்டினர் சட்டவிரோதமாக தங்கியிருந்து வேலை செய்து வருவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த தகவலை தொடர்ந்து, நேற்று மாலை முதல் நள்ளிரவு வரை சென்னிமலை காவல்துறை மற்றும் கியூ பிரிவு அப்பகுதியில் சோதனை நடத்தினர். இந்த சோதனையில், சட்டவிரோதமாக தங்கியிருந்ததற்காக 4 வங்காளதேச நாட்டினர் கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் முகமது நயீம் உசேன், முகமது மைனர் உசேன், முகமது டோரிகுல் இஸ்லாம் மற்றும் முகமது குத்தீஸ் உசேன் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக தங்கியுள்ள வெளிநாட்டினரை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க சென்னிமலை பகுதியில் சோதனைகள் தொடரும் என்று போலீசார் தெரிவித்தனர்.

# கோவையில் காரை வழிமறித்து 1.25 கிலோ கிராம் தங்கம் கொள்ளை: 5 தனிப்படைகள் அமைப்பு



கோவை, ஜூன் 16

கேரளாவை சேர்ந்த இருவர்கள் சென்னை சவுகார் பேட்டையில் இருந்து தங்கத்தை நகைகளாகவும், கட்டிகளாகவும் வாங்கி உள்ளனர். பின்னர் நேற்று சென்னையிலிருந்து கேரளாவிற்கு புறப்பட்டனர். இந்த நிலையில் காரில் கோவை வழியாக கேரளாவிற்கு சென்றுகொண்டிருந்தனர்.

அப்போது 5 பேர் கொண்ட கும்பல் ஒரு லாரியை பயன்படுத்தி திடீரென காரை வழிமறித்தனர். இதனையடுத்து காருக்குள் புகுந்து காரில் இருந்த இரண்டு பேரையும் மிரட்டி 1.25 கிலோ கிராம் தங்கக்கட்டிகள், 2 சவரன் தங்கச் சங்கிலி மற்றும் ரூ. 60 ஆயிரம் ரொக்க பணத்தையும் பறித்துச் சென்றனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்கள் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார் 5 தனிப்படைகள் அமைத்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். சம்பவம் நடந்த பகுதிகளில் சிசிடிவி காட்சிகளை போலீசார் சோதனை செய்ததில் கொள்ளை கும்பல் பாதிக்கப்பட்டவர்களை சென்னையில் இருந்தே பின் தொடர்ந்து வந்ததாகவும், ஆள் நடமாட்டம் இல்லாத இடமாக பார்த்து திட்டமிட்டு இந்த கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் தெரியவந்தது.

5 பேர் கொண்ட கும்பல் அதிரடியாக காரை மறித்து தங்கக்கட்டிகளை கொள்ளையடித்து சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

# தூத்துக்குடி மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை



தூத்துக்குடி ஜூன் 16

வடக்கு கர்நாடகம், தெலங்கானா, ஆந்திர பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி ஆகியவை நிலவுகின்றன. இதனால் தென்தமிழக கடலோர பகுதிகள், மன்னார் வளைகுடா, அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 45 முதல் 55 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 65 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே தூத்துக்குடி மாவட்ட மீனவர்கள் மறு அறிவிப்பு வரும்வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என மீன்வளத் துறை சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து விசைப்படகு மீனவர்களுக்கு மீன்பிடித் தடைகாலம் அமலில் இருப்பதால், நாட்டுப்படகு மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் தங்கள் படகுகளை கரையில் பாதுகாப்பாக நிறுத்தி வைத்துள்ளனர். மேலும் விசைப்படகு மீனவர்களுக்கான மீன்பிடி தடைக்காலம் இன்று (ஜூன் 14) முடிவடைகிறது. அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 15) என்பதால், மீண்டும் 16ம்தேதி முதல் விசைப்படகு மீனவர்கள் கடலுக்குச் செல்லலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# லஞ்சம் கேட்டு மிரட்டியதாக புகார்: டி.எஸ்.பி. உள்பட 3 பேர் மீது வழக்கு




தூத்துக்குடி ஜூன் 16

தூத்துக்குடி மாவட்டம், மணியாச்சி டி.எஸ்.பி. யாக லோகேசுவரன் ஆகஸ்ட் 2022 முதல் ஆகஸ்ட் 2024 வரை பணியாற்றி வந்தார். தற்போது இவர் சென்னை சைபர் குற்றப்பிரிவு டி.எஸ்.பி. யாக உள்ளார். இவரது அலுவலகத்தில் ஒட்டப்பிடாரம் போலீசார் பிரபாகரன், பசுவந்தனை போலீசார் சரவணன் ஆகியோர் மாற்றுப் பணியாக வேலை செய்து வந்தனர்.

இந்த போலீசார் கடந்த 2023ம் ஆண்டு புளியம்பட்டியைச் சேர்ந்த லாரி உரிமையாளர் மகாராஜன் என்பவருக்கு சொந்தமான லாரியில் சரள் மண் ஏற்றிச் சென்றவர்களை மருதன்வாழ்வு பகுதியில் மடக்கிப் பிடித்துள்ளனர். அந்த லாரியை விடுவிக்க டி.எஸ்.பி.க்கு ரூ.1 லட்சம், தங்களுக்கு ரூ.50 ஆயிரம் தரவேண்டும் என்று லாரி உரிமையாளர் மகாராஜனிடம் கேட்டு மிரட்டியுள்ளனர். இதனால் அவர் ரூ.1 லட்சம் கொடுத்து லாரியை மீட்டுள்ளார்.

இதுகுறித்து மகாராஜன், டி.எஸ்.பி. லோகேசுவரனை நேரில் சந்தித்து புகார் தெரிவித்து, ரூ.1 லட்சத்தை மீட்டுத் தரகோரிக்கை விடுத்துள்ளார். ஆனால் லோகேசுவரன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையாம். மேலும் போலீசார் 2 பேரும் ரூ.50 ஆயிரம் உடனடியாக தர வேண்டும் என்று மிரட்டியுள்ளனர். இதனால் மகாராஜன் குடும்பத்துடன் டி.எஸ்.பி. அலுவலகம் முன் தீக்குளிக்க முயன்றுள்ளார். இதைத் தொடர்ந்து டி.எஸ்.பி. லோகேசுவரன், 2 போலீஸார் மூலம் ரூ.1 லட்சம் பணத்தை திருப்பி கொடுத்து அனுப்பியுள்ளார். இது தொடர்பாக தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீஸார் விசாரணை நடத்தினர். விசாரணையின் அடிப்படையில், அரசு அனுமதி பெற்று, தற்போது சென்னையில் பணியாற்றும் சைபர் குற்றப் பிரிவு டி.எஸ்.பி. லோகேசுவரன், குலசேகரன்பட்டினம் காவல் நிலையத்தில் பணியாற்றி வரும் ஏட்டு பிரபாகரன், திருச்செந்தூர் தாலுகா காவல் நிலையத்தில் பணியாற்றி வரும் காவலர் சரவணன் ஆகியோர் மீது தூத்துக்குடி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தமிழன் ஒடிசாவை ஆள்வதா என்று கேட்டவர்கள் தமிழ் கடவுளை தொடுகிறார்கள்: சீமான் ஆவேசம்



தூத்துக்குடி, ஜூன் 16

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் இன்று தூத்துக்குடியில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"தேர்தலில் கூட்டணி என்பது எங்களுக்கு கிடையாது. நாங்கள் தனித்து தான் போட்டியிடுவோம். தீமைக்கு தீமை மாற்று அல்ல. தீமைக்கு நன்மை தான் மாற்று. தீமையை நன்மையை வைத்து ஒழிப்பேன் என்று நபிகள் நாயகம் கூறினார். அதைத் தான் இறைமகன் இயேசு கிறிஸ்துவும், பகவான் ஸ்ரீகிருஷ்ணரும் போதிக்கின்றனர்.

தி.மு.க. தனது ஆட்சியின் சாதனைகளை சொல்லி வாக்கு கேட்க வேண்டும். ஆனால் பா.ஜ.க.வை ஒழிக்க வேண்டும் என்று தி.மு.க. கூறுகிறது. அதேபோல் தி.மு.க.வை ஒழிக்க வேண்டும் என்று அ.தி.மு.க. கூறுகிறது. இவர்கள் அனைவரையும் ஒழிக்க வேண்டும் என்று கூறுவதுதான் எங்கள் அணி. நாங்கள் தனித்து நின்று மக்களுக்காக போராடுவோம்.

பா.ஜ.க.வின் முருகன் மாநாடு ஒரு மார்க்கெட்டிங். உத்தர பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோவிலை முழுமையாக கட்டி முடிக்காமல் தேர்தலுக்கு முன்பு திறந்தார்கள். அந்த தொகுதியில் சமாஜ்வாடி கட்சியின் தலைவர் அகிலேஷ் யாதவ், ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த வேட்பாளரை நிற்கவைத்து பா.ஜ.க.வை தோற்கடித்துவிட்டார். அதோடு அவர்களின் ராமர் அரசியல் தோல்வியடைந்துவிட்டது.

பூரி ஜெகன்நாதரை வைத்து ஒடிசாவிற்குள் நுழைந்தார்கள். தமிழன் ஒடிசாவை ஆள்வதா என்று கேட்டவர்கள் இன்று தமிழ் கடவுளை தொடுகிறார்கள். கேரளாவில் ஐயப்பனை தொட்டுப்பார்த்தார்கள். ஆனால் அங்கு அது எடுபடவில்லை. தமிழ்நாட்டில் சிவபெருமானை தொட்டுப்பார்த்தார்கள். அதுவும் பலனளிக்கவில்லை.

இறுதியாக தமிழர்களின் வாக்குகளை பறிக்க தமிழ் கடவுள் முருகனை தொடுகிறார்கள். எங்கள் தமிழ் கடவுளுக்கு முன்னால் அவர்களால் தமிழில் திருப்புகழ், திருமுருகாற்றுப்படை பாட முடியுமா? முருகனை போற்றிப் பாட தமிழில் எதுவும் இல்லையா? அதை அவர்கள் செய்ய மாட்டார்கள். அவர்களுக்கு இதில் ஒரு அரசியல் இருக்கிறது."

இவ்வாறு சீமான் தெரிவித்தார்.

# கடல்சீற்றம்: நாகை-இலங்கை பயணிகள் கப்பல் போக்குவரத்து தற்காலிக நிறுத்தம்



நாகப்பட்டினம் ஜூன் 16

நாகை இலங்கை காங்கேசன்துறை இடையே கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 14ந் தேதி முதல் 'செரியாபாணி' என்ற பெயரில் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டது. பருவமழை மற்றும் பல்வேறு காரணங்களால் அதே மாதம் 23ந் தேதி முதல் கப்பல் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதன்பின்னர், 'சுபம்' என்ற கப்பல் நிறுவனம் மீண்டும் நாகையில் இருந்து காங்கேசன்துறைக்கு 'சிவகங்கை' என்ற பெயரில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16ந் தேதி முதல் புதிய பயணிகள் கப்பல் சேவையை தொடங்கியது.

இருநாட்டு பயணிகளின் ஆர்வத்தால் சனிக்கிழமை தவிர, வாரத்தில் 6 நாட்கள் இருமார்க்கத்திலும் பயணிகள் கப்பல் இயக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில், கடல் சீற்றம் காரணமாக இன்று முதல் வரும் 17ந் தேதி வரை நாகை இலங்கை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தை தற்காலிகமாக நிறுத்துவதாகவும், 18ந் தேதி முதல் வழக்கம் போல் போக்குவரத்து நடைபெறும் என்றும் பயணிகள் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

# மனைவியை கழுத்தை அறுத்து கொல்ல முயற்சி: ஜாமீனில் வந்த வாலிபர் வெறிச்செயல்



திருப்பூர் ஜூன் 16

திருப்பூரில் தன்னை சிறைக்கு அனுப்பிய மனைவியை ஜாமீனில் வெளியே வந்து கழுத்தை அறுத்து கொல்ல முயன்ற வாலிபரின் வெறிச் செயலால் பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து போலீசார் தரப்பில் கூறப்படுவதாவது:

கோவை மாவட்டம் சூலூர் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவரின் மகன் குமார் (35 வயது) என்பவருக்கும், திருப்பூர் முதலிபாளையம் வஞ்சியம்மன் கோவில் பகுதியைச் சேர்ந்த மகேஸ்வரி (33 வயது) என்பவருக்கும், கடந்த 2015ம் ஆண்டு திருமணமானது. இவர்களுக்கு 4 குழந்தைகள் உள்ளன.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் அவரது பெண் குழந்தைக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக மகேஸ்வரி திருப்பூர் தெற்கு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்தார். இதனால் குமாரை போக்சோ சட்டத்தின் கீழ் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

கடந்த 110 நாட்களாக சிறையில் இருந்த குமார் நேற்று சிறையில் இருந்து ஜாமீனில் வெளியே வந்தார். திருப்பூர் முதலிபாளையம் பகுதியில் உள்ள மனைவியை பார்க்க சென்ற குமார் மனைவியிடம் நான் செய்தது தவறு என்று மன்னிப்பு கேட்டுள்ளார். மேலும் நாம் இனி சேர்ந்து வாழலாம் என்று தெரிவித்தார். ஆனால் மகேஸ்வரி அதை ஏற்க மறுத்ததால் இருவருக்கும் இடையே பயங்கர வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரமடைந்த குமார் வீட்டில் இருந்த அருவாமனையை எடுத்து மகேஸ்வரியின் கழுத்தை அறுத்துள்ளார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் கீழே சரிந்தார். அருகில் இருந்தவர்கள் சத்தம் கேட்டு வீட்டுக்குள் வருவதை பார்த்து குமார் அங்கிருந்து தப்பிச் சென்றார்.

உயிருக்கு போராடிய மகேஸ்வரியை உடனடியாக மீட்டு திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அவர்கள் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். தான் மனைவியை கொன்று விட்டதாக நினைத்து பயத்தில் திருப்பூர்வடக்கு போலீஸ் நிலையத்தில் குமார் சரணடைந்தார். தொடர்ந்து வடக்கு போலீசார், நல்லூர் போலீசாரிடம் அவரை ஒப்படைத்தனர். மேலும் போலீசார் இது குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருச்செந்தூர்: வீட்டுப்பாடம் எழுதாததை ஆசிரியை கண்டித்ததால் பள்ளி மாடியில் இருந்து குதித்த மாணவன்

தூத்துக்குடி ஜூன் 16

திருச்செந்தூர் சுப்பிரமணியபுரத்தை சேர்ந்தவர் பிரபாகர். இவருக்கு 2 மகன்கள் மற்றும் 2 மகள்கள் உள்ளனர். இதில் மூத்த மகன் ஆகாஷ் (14 வயது). இவர் திருச்செந்தூர் நாகர்கோவில் சாலையில் உள்ள தனியார் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 9ம் வகுப்பில் சேர்ந்து படித்துவருகிறார். ஆகாஷ் நேற்று வழக்கம் போல் பள்ளிக்கு சென்றுள்ளார். அப்பொழுது வீட்டுப்பாடம் எழுதாமல் வந்ததாக ஆசிரியை மாணவரை கண்டித்ததுடன், வகுப்பை விட்டு வெளியே நிற்க சொல்லி உள்ளார். இதனால் மன உளைச்சல் ஏற்பட்டதாக கூறி அந்த மாணவர் பள்ளியின் முதல் மாடியில் இருந்து கீழே குதித்துள்ளார். மாணவரை ஆசிரியர்கள், மாணவர்கள் மீட்டனர். இதுகுறித்து பள்ளி முதல்வர் மாணவரின் பெற்றோரிடம் தகவல் தெரிவித்தார். உடனடியாக அங்கு வந்த குடும்பத்தினர் மாணவரை திருச்செந்தூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு மாணவரை பரிசோதித்த மருத்துவர்கள் மாணவனுக்கு வலது கையிலும், இடுப்பிலும் எலும்பு முறிவு ஏற்பட்டதாக தெரிவித்தனர்.

இதையடுத்து மேல் சிகிச்சைக்காக நாகர்கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு ஆம்புலன்சில் மாணவரை அழைத்து சென்றனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்த திருச்செந்தூர் தாலுகா போலீசார் விரைந்து வந்து பள்ளியில் விசாரணை நடத்தினர். இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# குற்றால அருவிகளில் குளிக்க அனுமதி



தென்காசி, ஜூன் 16

தென்காசி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருநாட்களாக விட்டு விட்டு மழை பெய்தது .மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக குற்றால அருவிகளுக்கு நீர் வரத்து அதிகரித்தது. இதனால் பாதுகாப்பு கருதி மெயின் அருவி, ஐந்தருவி,சிற்றருவி,புலியருவி மற்றும் பழைய குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், மேற்குதொடர்ச்சிமலைப் பகுதிகளில் மழை சற்று குறைந்துள்ளது. இதனால் குற்றால அருவிகளில் வெள்ளம் குறைந்ததால் சுற்றுலாப்பயணிகளுக்கு குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, குற்றாலம் பிரதான அருவி, ஐந்தருவி, புலியருவி ஆகியவற்றில் சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

# மின்வாரிய வளர்ச்சி பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்: மேற்பார்வை பொறியாளர் உத்தரவு



திருநெல்வேலி ஜூன் 16

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சார்பாக திருநெல்வேலி மின் பகிர்மான வட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி கிராமப்புற கோட்டத்தின் மின் பயனீட்டாளர்கள் குறைதீர்க்கும் முகாம் திருநெல்வேலி தியாகராஜநகரில் உள்ள செயற்பொறியாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருநெல்வேலி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி கலந்து கொண்டு பொதுமக்கள் அளித்த புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க திருநெல்வேலி கிராமப்புற கோட்ட செயற்பொறியாளர் குத்தாலிங்கம் மற்றும் பிற அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார். இந்த நிகழ்ச்சியில் திருநெல்வேலி கிராமப்புற கோட்டத்திற்கு உட்பட்ட அனைத்து மின் பொறியாளர்களும் கலந்து கொண்டனர்.

மின் பயனீட்டாளர்கள் குறை தீர்க்கும் முகாம் முடிந்தவுடன் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மத்தியில் மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி பேசும்போது, "வானிலை அறிக்கைபடி இன்னும் சில தினங்களுக்கு திருநெல்வேலி, தென்காசி மாவட்டத்தில் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதால் திருநெல்வேலி கிராமப்புற கோட்டத்தில் அனைத்து இடங்களுக்கும் சீரான மின் விநியோகத்தை உறுதிப்படுத்தவும், அனைத்து மின்னிணைப்புகளையும் தொடர்ச்சியாக ஆய்வு செய்து வாரிய விதிமுறைகளுக்கு முரணான உள்ள மின் இணைப்புகளை முறைப்படுத்தவும், விவசாய நிலங்களில் மின் வேலி அமைக்கப்பட்டு இருந்தால் உடனடியாக மின் துண்டிப்பு செய்து காவல்துறை உதவியுடன் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், திருநெல்வேலி கிராமப்புற கோட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகளை விரைந்து முடிக்கவும், பொது மக்களிடையே மின் சிக்கனம், மின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும்" உத்தரவிட்டார்.

மேலும் பொது மக்கள் மின்சாரம் சம்பந்தமாக ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் செயலி மூலமாகவும் (TN PDCL OFFICIAL APP) தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் சமூக வலைத்தளங்கள், திருநெல்வேலி மின்தடை நீக்கும் மைய தொலைபேசி எண்கள் 9445859032, 9445859033, 9445859034, மற்றும் மின்னகம் மின்நுகர்வோர் சேவை மையம் தொலைபேசி எண் 94987 94987 ஆகியவற்றை தொடர்பு கொண்டு மின்சாரம் சம்பந்தமான அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளலாம் என்று கூட்டத்தின்போது தெரிவிக்கப்பட்டது.

# சர்வதேச கழிப்பறை திருவிழா: திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கழிப்பறை நடைபயணம்



சென்னை ஜூன் 16

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் வாஷ் லேப் (Washlab), சியர் (Cheer) மற்றும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) அமைப்புகள் இணைந்து கடந்த 4ந்தேதி நடத்திய சர்வதேச கழிப்பறை திருவிழா 3.0வின் ஒரு அங்கமாக, கழிப்பறையை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிப்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கழிப்பறை நடைபயண விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று திருவல்லிக்கேணியில் நடைபெற்றது.

இந்த நடைபயணத்தில் உளவியலாளர் சண்ணுதி சுரேஷ், ஆராய்ச்சியாளர் விஷ்ணு வேணுகோபால், நகரத்தின் பல பகுதிகளிலிருந்து பல்வேறு துறை சார்ந்தோர், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், வாஷ் லேப், சியர், ரீசைக்கிள் பின் அமைப்புகளை சார்ந்தவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கழிப்பறையில் தனிநபரின் உளவியல் குறித்த நேரடி அனுபவங்கள் மற்றும் உணர்வுகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டு, பொதுக் கழிப்பறைகளை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பயன்படுத்தும் பொறுப்புணர்வு உள்ளிட்ட பல கருத்துரையாடல்கள் மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

16.6.2025

# போலீஸ் நிலையத்தில் ருசிகரம்: அடுத்தவரின் மனைவியை திருமணம் செய்து வைக்கக்கோரி வாலிபர் ரகளை



சென்னை, ஜூன் 16


சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த 35 வயது இளம்பெண், திருமணமாகி சூளைமேடு பகுதியில் தனது கணவருடன் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். அந்த வீட்டின் மாடியில் தமிழ்ச்செல்வன்(வயது 30) என்ற வாலிபர் வசித்து வந்தார்.இதனால் திருமணமான பெண்ணுடன், தமிழ்ச்செல்வனுக்கு பழக்கம் ஏற்பட்டது. இருவரும் நட்பாக பழகி வந்தனர். அந்த பெண்ணின் பேச்சில் மயங்கிய தமிழ்ச்செல்வனுக்கு அவர் மீது ஒருதலை காதல் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் கணவரை விட்டுவிட்டு தன்னுடன் வந்து விடுமாறும், நாம் இருவரும் சேர்ந்து சந்தோஷமாக வாழலாம் என்றும் அந்த பெண்ணிடம் தமிழ்ச்செல்வன் கூறினார்.

அதை கேட்டு அதிர்ச்சி அடைந்த இளம்பெண், "நீ பேசுவது தவறு. எனக்கு திருமணமாகி விட்டது. பெற்றோர் பார்க்கும் பெண்ணை திருமணம் செய்து கொள்" என்று அறிவுரை கூறினார். அதன்பிறகு அவர் தமிழ்ச்செல்வனுடன் பேசுவதை நிறுத்தி விட்டதாக தெரிகிறது.இதனால் ஆத்திரம் அடைந்த தமிழ்ச்செல்வன், இளம்பெண்ணின் வீட்டுக்கு சென்று, "எதற்காக என்னுடன் பேச மறுக்கிறாய்?" என்று கேட்டு தகராறு செய்து, இளம்பெண்ணை சரமாரியாக தாக்கியதாக கூறப்படுகிறது.

இது குறித்து அந்த இளம்பெண் அரும்பாக்கம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார், தமிழ்ச்செல்வனை போலீஸ் நிலையம் அழைத்து விசாரித்தனர்.விசாரணையில் தமிழ்ச்செல்வன், திருமணமான பெண் என தெரிந்தும், அவர் மீது ஒரு தலை காதல் கொண்டு, அவருடன் பேசி பழகி திருமணம் செய்து கொள்ளும் அளவுக்கு சென்றது தெரியவந்தது. இதையடுத்து தமிழ்ச்செல்வனிடம், "நீ திருமணம் செய்து கொள்ள விரும்பும் பெண்ணுக்கு ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. அடுத்தவரின் மனைவி மீது ஆசைபடகூடாது. உன்னால் அந்த பெண்ணின் குடும்ப வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படும். அதைவிட்டு விட்டு ஒதுங்கிவிடு" என அறிவுரை கூறினர்.

ஆனால் அதை ஏற்க மறுத்த தமிழ்ச்செல்வன், "அந்த பெண்ணை என்னால் மறக்க முடியவில்லை. அவருக்கு ஏற்கனவே திருமணம் ஆனது பற்றி எனக்கு கவலையில்லை. அந்த பெண் இல்லாமல் என்னால் இருக்கமுடியாது. அந்த பெண்ணை எனக்கு திருமணம் செய்து வையுங்கள்" என்று கூறி போலீஸ் நிலையத்தில் ரகளையில் ஈடுபட்டார். இதையடுத்து போலீசார், இளம்பெண்ணை தாக்கியதாக வழக்குப்பதிவு செய்து தமிழ்ச்செல்வனை கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# நீட் முடிவுகள்: முதல் 100 இடங்களில் இடம் பிடித்த 6 தமிழக மாணவர்கள் நயினார் நாகேந்திரன் மகிழ்ச்சி



சென்னை, ஜூன் 16

தமிழக பா.ஜக. தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;

நாடு முழுவதும் நடைபெற்ற இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் தேர்வு முடிவுகள் இன்று வெளியாகியுள்ள நிலையில், முதல் 100 இடங்கள் பிடித்த மாணவர்கள் பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த 6 பேர் இடம் பிடித்திருப்பது எல்லையற்ற மகிழ்ச்சியளிக்கிறது.

அரசியல் ரீதியான அனைத்து தடைகளையும் தகர்த்தெறிந்து தங்களது அயராத உழைப்பினாலும் விடா முயற்சியினாலும் நீட் தேர்வினை எதிர்கொண்டவர்களுக்கும் தகுதி மதிப்பெண் பெற்று தேர்வானவர்களுக்கும் முதல் நூறு இடங்களைப் பிடித்து சாதித்தவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்! நீட் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் அனைவரும் எதிர்காலத்தில் தலைசிறந்த மருத்துவர்களாக மக்கள் சேவையில் சிறந்து விளங்கவும் இம்முறை வெற்றி வாய்ப்பைத் தவற விட்டவர்கள் மனம் தளராது மீண்டு முயற்சிக்கவும் வாழ்த்துகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னையில் தமிழக அரசு சார்பில் நீர்வள மேலாண்மை பயிலரங்கம்

சென்னை, ஜூன் 16

சென்னை எழும்பூரில் நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி" என்ற தலைப்பில் பயிலரங்கம் நடைபெற்றது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு அரசின் நீர்வளத் துறையின் சார்பில், இன்று (14.06.2025) நீர்நிலைகள் புத்துயிர் பெறுவது மற்றும் நீர்த்தேவையில் தன்னிறைவு பெறுவதின் அவசியத்தை உணர்த்தும் பொருட்டு "நிலையான நீர்வள மேலாண்மைக்கான மக்கள் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சி" என்ற தலைப்பில் பயிலரங்கம் சென்னை எழும்பூரில் உள்ள ரேடிஷன் ப்ளூவில் நடைபெற்றது. இப்பயிலரங்கத்தில் தமிழ்நாடு அரசின் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை , சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை, பங்குதாரர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

இப்பயிலரங்கத்தில் பங்கேற்ற பிரதிநிதிகளை வரவேற்று உரையாற்றிய நீர்வளத் துறை அரசுச் செயலாளர் ஜெயகாந்தன், நீர்நிலைகளைப் புத்துயிர் பெறச் செய்வதில் சமூகப் பங்களிப்பின் அவசியத்தை குறித்தும் முக்கியத்துவத்தை குறித்தும் வலியுறுத்தினார்.

பயிலரங்கத்தை துவக்கி வைத்து உரையாற்றிய தமிழ்நாடுஅரசின்தலைமைச்செயலாளர்என்.முருகானந்தம், இன்றைய நிலையில் தமிழ்நாடு 65 சதவிகிதம் நகரமயமாக்கலில் உள்ளது ஆகையால் மாநிலத்தின் நீர்நிலைகளை சரியான முறையில் பராமரிப்பதின் மூலம், தேவையான நீரை சேகரிக்கவும் வெள்ளத்தை கட்டுப்படுத்தவும் பயன்படும் என்றும், இப்பணிகளை மக்கள் ஒருங்கிணைப்போடு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என வலியுறுத்தினார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற மராட்டிய மாநிலத்தின் மண் மற்றும் நீர் பாதுகாப்பு துறையின் தலைமைப் பொறியாளர் மற்றும் இணை செயலர் விஜய் டியோராஜ், அவர்கள் மராட்டிய மாநிலத்தில் மக்கள் பங்களிப்போடு செயல்படுத்தப்பட்டு வரும் நீர்நிலைகள் மேம்படுத்தும் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். நகராட்சி நிர்வாகம் மற்றும் நீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர், கார்த்திகேயன், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் அமுதா மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் தலைமையில், சமூக பங்களிப்புடன் நீர்நிலைகளைப் புனரமைப்பது தொடர்பான பல்வேறு தலைப்புகளில் குழு விவாதங்களும் நடத்தப்பட்டன.

நீர்நிலைகளைப் புத்துயிர் பெறுவதற்கான பயிலரங்கை முன்னெடுத்துச் செல்ல ஆக்கப்பூர்வமான வழிமுறைகளை உருவாக்கி, மக்கள் பங்களிப்புடன் பொது தனியார் கூட்டமைப்பின் மூலம் நீர்நிலைகளை மேம்படுத்தும்திட்டத்தைசெயல்படுத்தநிதித்துறையின் அரசு முதன்மைச் செயலாளர் உதயசந்திரன் வலியுறுத்தினார். நீர்வளத் துறையின் முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) ரமேஷ் நன்றியுரையுடன் பயிலரங்கு நிறைவடைந்தது."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இன்றைய ராசி பலன்கள் (16.6.2025)

- **மேஷம்**: நன்மை காணும் நாள். காரியங்களில் வெற்றி. பணவரவுகள் கூடும். பரிகாரம்: சண்முகப் பெருமானுக்கு பூஜை செய்யுங்கள்.
- **ரிஷபம்**: குடும்பச் சூழ்நிலை அமைதியாக இருக்கும். சொத்துச் சேர்க்கை யோகம். பரிகாரம்: விநாயகரை வழிபடுங்கள்.
- **மிதுனம்**: புதிய முயற்சிகள் வெற்றி பெறும். நண்பர்களிடையே ஒத்துழைப்பு அதிகரிக்கும். பரிகாரம்: துர்க்கைக்கு வழிபாடு செய்யலாம்.
- **கடகம்**: குடும்பத்திலே சின்னச் சச்சரவு. நிதானமாகச் செயல்பட வேண்டிய நாள். பரிகாரம்: சந்திரனுக்குநீர்ப்பூஜை செய்யவும்.
- **சிம்மம்**: உத்தியோகத்தில் உயர்வு. அரசு வேலைக்கான சந்தர்ப்பம். பரிகாரம்: சூரியனை வழிபடுங்கள்.
- **கன்னி**: திட்டமிட்ட வேலைகள் நடைபெறும். மன உறுதி தேவைப்படும் நாள். பரிகாரம்: துர்கையை நினைவு கூறுங்கள்.
- **துலாம்**: வியாபாரத்தில் லாபம். புதிய வரவேற்புகள். மனதில் நிம்மதி. பரிகாரம்:மகாலட்சுமிக்குஅர்ச்சனை செய்யவும்
- **விருச்சிகம்**: பயண யோகம். உறவுகளில் சிறிய சர்ச்சைகள் ஏற்படலாம். பரிகாரம்: சனி பகவானுக்கு எண்ணெய் அபிஷேகம் செய்யுங்கள்.
- **தனுசு**: பணவரவு அதிகரிக்கும். புதுப் பொருட்கள் வாங்க வாய்ப்பு. பரிகாரம்: குரு பகவானுக்கு மஞ்சள் அர்ச்சனை செய்யவும்.
- **மகரம்**: சிந்தனைகள் தெளிவடையும். கடன் சுமைகள் குறையும். பரிகாரம்: ஹனுமனை வழிபடுங்கள்.
- **கும்பம்**: நட்பு வட்டம் விரிவடையும். கலைவல்லுநர்களுக்கு வாய்ப்பு. பரிகாரம்: சிவபெருமானை நினைவில் கொள்ளவும்.
- **மீனம்**: முயற்சியில் சிரமம். ஆனால் கடைசியில் வெ ற்றி. கவனம் தேவை. பரிகாரம்: துர்க்கை அல்லது லட்சுமி வழிபாடு உகந்தது.

# தூத்துக்குடியில் மதுபான கடையில் திருட்டு: வாலிபர் கைது

தூத்துக்குடி, கிருஷ்ணராஜபுரம், அன்னை வேளாங்கன்னி நகரைச் சேர்ந்த மாடசாமி மகன் கனிராஜா (வயது 55), பூப்பாண்டியாபுரத்தில் உள்ள அரசு மதுபானக் கடை அருகில் மதுபான கடை நடத்தி வருகிறார். கடந்த 10ம் தேதி கடையை பூட்டிவிட்டு சென்ற பின்னர் மறுநாள் பகல் 12 மணிக்கு வந்து கடையை திறந்துள்ளார். அப்போது கல்லாவில் இருந்த ரூ.3 ஆயிரம் பணம் திருடு போயிருந்தது. இதுகுறித்து அவர் தாளமுத்துநகர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அந்த புகாரின்பேரில் சப்இன்ஸ்பெக்டர் முத்துராஜா வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்தார். அதில் தூத்துக்குடி லூர்தம்மாள்புரத்தைச் சேர்ந்த காளிமுத்து மகன் சக்திவேல் (வயது 28) பணத்தை திருடியது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்தனர்.

# கொலை வழக்கில் 3 வாலிபர்களுக்கு ஆயுள் தண்டனை



திருச்செந்தூர் அமலிநகர் பகுதியைச் சேர்ந்த அமலன் மகன் பிரபு (வயது 29) என்பவரை கடந்த 22.5.2014 அன்று அமலிநகர் மையவாடியில் வைத்து கொலை செய்து புதைத்த வழக்கில் அமலிநகர் பகுதியைச் சேர்ந்தவர்களான தயானந்தன் மகன் டெரன்ஸ்(30), மைக்கேல் மகன் பிரக்சின் ஷியாஷ்டன்(32) மற்றும் ஆல்பர்ட் மகன் இருதய அந்தோணி சிரியல்(32) ஆகியோரை திருச்செந்தூர் காவல் நிலைய போலீசார் கைது செய்தனர். இவ்வழக்கின் விசாரணை தூத்துக்குடி மாவட்ட முதலாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி தாண்டவன் நேற்று (13.6.2025) டெரன்ஸ், ஷியாஷ்டன், இருதய அந்தோணி சிரியல் ஆகியோருக்கு தலா ஆயுள் தண்டனை மற்றும் ரூ.15 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கை சிறப்பாக புலனாய்வு செய்த அப்போதைய திருச்செந்தூர் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ரெகுராஜன், குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் ஆனந்த் கேப்ரியல் ராஜ், விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு பரணி ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட்ஜான் பாராட்டினார்.

# ஓ.டி.டி.யில் வெளியானது ஏஸ் திரைப்படம்



கடந்த 2018ம் ஆண்டு விஜய் சேதுபதி நடிப்பில் வெளியான திரைப்படம் 'ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்'. இப்படத்தை ஆறுமுக குமார் இயக்கியிருந்தார். இத்திரைப்படம் பெரிய அளவில் வரவேற்பு பெறாத நிலையில், 5 ஆண்டுகள் கழித்து இந்த கூட்டணி 'ஏஸ்' என்ற திரைப்படம் வெளியாகி உள்ளது.

விஜய்சேதுபதி 51வது படமான 'ஏஸ்' திரைப்படத்தில் பலவித்தியாசமான கெட்டப்புகளில் நடித்துள்ளார். விஜய் சேதுபதியுடன் அனைத்து காட்சிகளிலும் பயணிக்கும் கதாபாத்திரத்தில் யோகி பாபு நடித்துள்ளார். ருக்மிணி, விஜய் சேதுபதிக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். மேலும் ஜஸ்டின் பிரபாகரன் படத்திற்கு இசை அமைத்திருக்கிறார். படத்தின் பின்னணி இசையை சாம் சி.எஸ் மேற்கொண்டுள்ளார்.

கடந்த மாதம் 23ம் தேதி வெளியான இத்திரைப்படம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இப்படம் ரூ.30 கோடி வரை வசூல் செய்துள்ளது. இந்த நிலையில், இப்படம் அமேசான் பிரைம் ஓ.டி.டி தளத்தில் வெளியாகி உள்ளது.

# மிகப்பெரிய தொகைக்கு விற்பனையான 'காதி' படத்தின் ஓ.டி.டி உரிமம்




'அருந்ததி' என்ற பேய் படத்தில் நடித்து பிரபலமானவர் அனுஷ்கா ஷெட்டி. இவரின் சினிமா வாழ்க்கையில் 'பாகுபலி' முக்கிய படமாக அமைந்தது. தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்ளிட்ட மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வந்த இவரது நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'மிஸ் ஷெட்டி மிஸ்டர் பொலிஷெட்டி'.

தற்போது இவர் கிரிஷ் ஜாகர்லமுடி இயக்கத்தில் தனது 50வது படமான "காதி" என்ற படத்தில் நடித்து முடித்துள்ளார். இதில் விக்ரம் பிரபு முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இப்படம் போதைப்பொருள் கடத்தலை மையமாக வைத்து உருவாகியுள்ளது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் இந்தி மொழிகளில் ஏப்ரல் மாதம் 18ந் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்திருந்தது. ஒரு சில காரணத்தால் அந்த தேதியில் படத்தினை வெளியிட முடியவில்லை.

பின்னர் அதிகாரபூர்வ ரிலீஸ் தேதியை அறிவித்தனர். அதன்படி, அனுஷ்கா விக்ரம் பிரபு நடித்துள்ள 'காதி' படம் வருகிற ஜூலை 11ம் தேதி வெளியாகும் என அறிவிக்கப்பட்டது. பெரும் எதிர்பார்ப்பை உண்டாக்கி இருக்கும் இப்படத்தின் ரிலீசை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில், இப்படத்தின் ஓ.டி.டி உரிமம் மிகப்பெரிய தொகைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி, ரூ.36 கோடிக்கு அமேசான் பிரைம் நிறுவனம் வாங்கி உள்ளதாக கூறப்படுகிறது.

# திருமணம் குறித்து பரவிய வதந்தி அனிருத் விளக்கம்



தனுஷ் நடித்த '3' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் அனிருத். ரஜினிகாந்த், கமல்ஹாசன், விஜய், அஜித் என முன்னணி கதாநாயகர்களின் படங்களுக்கு இசையமைத்துள்ளார். கடந்த 12 ஆண்டுகளில் ஏராளமான சூப்பர் ஹிட் பாடல்களை கொடுத்துள்ளார்.

இசையமைப்பாளராக மட்டுமில்லாமல் மற்ற இசையமைப்பாளர்களின் இசையில் உருவான பாடல்களையும் பாடியுள்ளார். இப்போது அவர் கூலி, மதராஸி, ஜனநாயகன், ஜெயிலர் 2 என பல படங்களுக்கு இசையமைத்து வருகிறார்.

இந்த நிலையில், கடந்த சில நாட்களாக இவரின் திருமணம் தொடர்பான தகவல் வெளியாகி வருகின்றன. அதாவது, ஐபிஎல் கிரிகெட் தொடரில் உள்ள ஐதராபாத் அணியின் உரிமையாளர் காவியா மாறனைஅனிருத்திருமணம்செய்யவுள்ளதாகசமூகவலைத்தளங்களில் தகவல்கள் தீயாக பரவியது.

இந்த நிலையில் தனது திருமணம் தொடர்பான வதந்திகளுக்கு இசையமைப்பாளர் அனிருத் ரவிச்சந்தர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். "கல்யாணமா.. எனக்கா? கொஞ்சம் அமைதியா இருங்க நண்பர்களே தயவுசெய்து வதந்தி பரப்புவதை நிறுத்துங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# டிஎன்பிஎல்: திண்டுக்கல் அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி



டிஎன்பிஎல் கிரிக்கெட் போட்டிகள் சேலத்தில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் 11வது ஆட்டத்தில் மதுரை திண்டுக்கல் அணிகள் இன்று மோதின. இந்த ஆட்டத்துக்கான டாஸ் போடப்பட்டது. இதில் திண்டுக்கல் அணி டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வுசெய்தது. அதன்படி, மதுரை அணி முதலில் பேட்டிங் செய்தது.

திண்டுக்கல் அணியின் அபார பந்துவீச்சால் மதுரை அணி ரன்கள் குவிக்க திணறியது. அத்துடன், அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இறுதியில் மதுரை அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 150 ரன்கள் எடுத்துள்ளது. அதிகபட்சமாக ரகுமான் 50 ரன்கள் எடுத்தார். சந்திரசேகர், பெரியசாமி ஆகியோர் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதையடுத்து 151 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய திண்டுக்கல் அணி இறுதியில் 12.3 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 151 ரன்கள் எடுத்தது. இதன்மூலம் 9 விக்கெட் வித்தியாசத்தில் திண்டுக்கல் அணி வெற்றி பெற்றது. திண்டுக்கல் அணி பெற்ற 2வது வெற்றி இதுவாகும்.

# உலக கோப்பை துப்பாக்கி சுடுதல்; கலப்பு அணி பிரிவில் தங்கம் வென்ற இந்தியா



உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டி ஜெர்மனியின் முனிச் நகரில் நடந்து வருகிறது. இதில் நடந்த பெண்களுக்கான 10 மீட்டர் ஏர் ரைபிள் போட்டியில், இந்திய வீராங்கனை சுருச்சி இந்தர்சிங் தங்கப் பதக்கம் வென்று அசத்தினார்.

19 வயதான சுருச்சி ஏற்கனவே பியூனஸ் அய்ரஸ் மற்றும் லிமாவில் நடந்த உலகக் கோப்பை போட்டிகளில் தங்கம் வென்றிருந்தார். அதன் தொடர்ச்சியாக இப்போது உலக கோப்பை போட்டியில் வெற்றி பெற்று 'ஹாட்ரிக்' சாதனை படைத்துள்ளார்.

இந்த நிலையில், இன்று நடைபெற்ற கலப்பு அணி 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவு போட்டியில், இந்தியாவை சேர்ந்த அர்ஜுன் பாபுட்டாஆர்யா போர்சே அணி தங்கப்பதக்கம் வென்று அசத்தியுள்ளனர். அவர்கள் ஒலிம்பிக் பதக்கம் வென்ற சீனாவை சேர்ந்த ஷெங்க் லிஹாவ்வாங்க் செபெய் அணியை 177 என்ற புள்ளி கணக்கில் வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றனர்.

# டிஎன்பிஎல்: திண்டுக்கல் அணிக்கு 151 ரன்கள் இலக்கு நிர்ணயித்த மதுரை



டிஎன்பிஎல் கிரிக்கெட் போட்டிகள் சேலத்தில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் 11வது ஆட்டத்தில் மதுரை திண்டுக்கல் அணிகள் இன்று மோதி வருகின்றன. இந்த ஆட்டத்துக்கான டாஸ் போடப்பட்டது.

இதில் திண்டுக்கல் அணி டாஸ் வென்று பந்துவீச்சை தேர்வுசெய்துள்ளது. அதன்படி, மதுரை அணி முதலில் பேட்டிங் செய்தது.

திண்டுக்கல் அணியின் அபார பந்துவீச்சால் மதுரை அணிரன்கள்குவிக்கதிணறியது.அத்துடன்,அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து தடுமாடியது. இறுதியில் மதுரை அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 150 ரன்கள் எடுத்துள்ளது. அதிகபட்சமாக ரகுமான் 50 ரன்கள் எடுத்தார். சந்திரசேகர், பெரியசாமி ஆகியோர் அதிகபட்சமாக 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதையடுத்து 151 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் திண்டுக்கல் அணி களமிறங்க உள்ளது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.